மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) முதல் (உ) வரை. கடலூருக்கருகில், புவியியல் ஆராய்ச்சித்துறை, கல்லாக உறைந்த மரங்கள் எதனையும் கண்டு பிடிக்கவில்லை. எனினும், தென் ஆற்காடு மாவட்டம், திருவக்கரைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லாக உறைந்த மரக்கட்டை அமைந்துள்ள பகுதி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பூங்காவாக இந்தியப் புவியியல் ஆராய்ச்சித் துறையால் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. புவியியல் ஆய்வுகளுக்காக பண்டைக் காலத்தில் இருந்தவையும் கல்லாக உறைந்தவையுமான இந்த மரப் பகுதிகளில் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அவை வேலியிட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

கொண்டைக்கடலை விநியோகம்

* 412 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டைக்கடலை தற்போது இறக்குமதி செய்கின்றதா?

(இ) அப்படி இறக்குமதி செய்யப்படும் கொண்டைக்கடலையை இங்குள்ள வணிகர்களுக்கு வழங்குவதில் கையாளப்படும் முறைகள் யாவை?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Government Ration Shop, Gopalapuram

* 413 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Government Ration Shop at Gopalapuram was looted on 21st August 1972; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி: (அ) 21-8-1972-ல் கோபாலபுரத்தில் உள்ள அரசு பங்கீட்டு பொருள் சில்லறை விற்பனைக் கடையில் ரூ. 9,524 ரொக்கம் வைத்திருந்த பெட்டி ஒன்று களவாடப்பட்டது. வேறு இழப்பு ஏதுமில்லை.

(இ) காவல் துறையினரிடம் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது, ஒரு காவலாளி மீதும் சில்லறை விற்பனைக் கடையின் கண்காணிப்பாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப் பட்டுள்ளது.

யாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினு எண்கள் 414, 415 ஆகிய இரண்டும் மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்கள் வேண்டு கோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

மதுரையில் பட்டதாரி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் அதனுல் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர் களும் கீழ்க்கண்ட பிரச்சினையைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிருர்கள்—அதாவது

The arrest in Madurai on 16th March 1973 of 252 BT teachers including 22 women teachers and failure of Government to settle the dispute and unrest in Madurai and other areas.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும ஓரளவு இதைப்போன்ற ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அவர்கள் இப்போது பேரவை யில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எப்படி இது பேரவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு 42-வது விதியின்கீழ் வருகிறது என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாக விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பி.டி. ஆசிரியர்கள் பிரச்சினை பல முறை இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டது என்பதை அறி வோம். சென்ற தடவை இதுபற்றி இங்கு கிளப்பப்பட்ட போதெல்லாம், சென்னை நகரத்தில் பி.டி. ஆசிரியர்கள் தடை உத்தரவை மீறினுர்கள், அதனுல் கைது செய்யப்பட்டார்கள் என்று விளக்கம் கூறினுர்கள். அவர் களது பிரச்சினை தீராத காரணத்தால்தான் மதுரை நகரத்தில் 250 பி.டி. ஆசிரியர்கள் ஊர்வலமாகச் சென்ருர்கள். 22 பெண்கள் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். பொதுவாக இந்த ஆசிரியர்கள் சம்பந்த ம[illegible] அரசு தங்களுக்கு நேரடியாகச் சவால் விட்டிருக்கிருர்கள் என்ற முன[illegible]ல் இந்தப் பிரச்சினையை அணுகி இருக்கிறது என்பதுதான் என்னு டைய [illegible]ச்சாட்டு.